**TAMIL**

# *The Spoken Word*

*by*

*WILLIAM MARRION BRANHAM*

# நிக்கோலாய் மதத்தின் வித்து, போதகம் - அந்திக்கிறிஸ்துவின் ஆவி

**(THE SEED AND DOCTRINE OF NICOLAITANES - THE SPIRIT OF ANTI-CHRIST)**

**ஏழாம் தூதன்**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**"உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து"**

# நிக்கோலாய் மதத்தின் வித்து
## (THE SEED OF NICOLAITANES)

வெளி.2:6. ''நான் வெறுக்கிற நிக்கோலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய், இது உன்னிடத்திலுண்டு.

நிக்கோலாய் மதஸ்தரைக் குறித்துக் கருத்து வேற்றுமையுண்டு. அந்தியோகியா பட்டினத்தில் நிக்கோலாஸ் (Nicholas) என்பவர் ஒருவர் இருந்தாரென்றும், அவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி, எருசலேமின் ஏழு மூப்பர்களில் (Deacons) ஒருவராக நியமிக்கப்பட்டார் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். அவரும் அவரைச் சார்ந்தவர்களும் அஞ்ஞானப் பண்டிகைகளைக் கொண்டாடி, மாம்ச இச்சைகளின் கிரியைகளில் ஈடுபட்டனர். அநேக அனுபவங்களின்மூலம் மாம்சப் பிரகாரமான கிரியைகளில் திறமைபெற முடியும் என்ற அவர்கள் எண்ணங் கொண் டவர்கள் பழைய ஏற்பாட்டின் பிலேயாமைப் போன்று இவர்கள் மக்க ளைத் தவறான வழியில் நடத்திப் பின்னர் அவர்களை ஆட்கொண்டனர். எபேசுவிலிருந்து துரத்தப்பட்டு பெர்கமுவில் இவர்கள் குடிகொண்டனர் என்று பாரம்பரியம் கூறுகிறது.

மேற்கூறிய கருத்து உண்மையாயிருக்க வழியில்லை. அது ஒரு கட்டுக்கதையாகத் தான் இருக்கவெண்டும். எபேசு சபையிலுள்ளவர்கள் பொல்லாதவைகளைச் **சகிக்கக் கூடாமலிருந்தனர்** என்று வேதம் உரைக்கிறது (வெளி.*2:2*). அப்படியெனில் அவர்கள் பொல்லாத கிரியை களைக் கொண்ட இந்த நிக்கொலாய் மதஸ்தரைச் சபையினின்று புறம்பாக்கியிருக்க வேண்டும். இவர்களின் கிரியைகளை எபேசு சபை வெறுத்ததாக வசனத்தின் மூலம் நாமறிகிறோம். ஆனபடியால், நிக்கொலாய் மதஸ்தர் எபேசு சபைக்குள்ளிருந்து தங்களுடைய கிரியை களைச் செய்திருக்க வேண்டும் என்று எண்ணுவதற்கு வழியுண்டு. எபேசு சபையின் உண்மையான விசுவாசிகள் இவர்களின் கிரியைகளை

வெறுத்தாலும், அவைகளைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. இவ்வாறு எபேசு சபையிலே விதைக்கப்பட்ட நிக்கோலாய் மதஸ்தரின் வித்து நாளடைவில் வளர்ந்து போதனையாக மாறி, கடைசியில் அக்கினிக் கடலில் தள்ளப்படும்.

'நிக்கொலாய்' என்னும் கிரேக்க பதம், 'சபையின் மக்களை ஆட் கொள்ளுதல்' என்னும் அர்த்தம் பெறும். ஆதிசபையிலே, யாரோ ஒருவர் சபையின் ஆதிகத்தைக் கைப்பற்றித் தன் கிரியைகளின் மூலம் மக்களை ஆட்கொண்டிருக்க வேண்டும். இவரைச் சார்ந்த எல்லோரும் நிக்கொலாய் மதஸ்தர்களாயினர். இக்காலத்தைப் போலவே அக்காலத்தில் அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் விரோதமான வழிகளைப் பின் பற்றினர்.

எபேசு சபையின் உண்மையான விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றி ஜீவனைப் பெற்றறிருந்தனர். ஆனால் விசு வாசத்தினின்று வழுவினவர்களோ தேவனுக்கு விரோதமான கிரியை களின் மூலம் ஜீவனற்ற மார்க்கத்தைக் கடைபிடித்தனர். ஜீவவிருட்சமும், அறியத்தக்க விருட்சமும் ஏதேன் தோட்டத்தின் மத்தியில் நாட்டப்பட்டி ருந்தன. இவைகளின் கிளைகள் சந்தேகமின்றி அவ்விடத்தில் ஒன்றுக் கொன்று பிணைந்திருக்க வேண்டும். அவ்வாறே ஆவிக்குரிய வழிபடு தலும், செத்தமார்க்கமும் எக்காலத்திலும் காணப்படுகின்றன. எபேசு சபையில் விசுவாசிகளும், அவிசுவாசிகளும் ஒருங்கே காணப்பட்டனர். ஒரு சாரார் கர்த்தருக்கு **உண்மையாயிருந்தனர்.** மற்றொரு சாரார் **தவறான** வழியில் சென்று கொண்டிருந்தனர். இவர்கள் கோதுமை மணிகளும், களையும் போன்று அடுத்தடுத்து வளர்ந்தனர். தேவன் ஒவ்வொரு **சாராரோடும்** ஒவ்வொரு **சாராரைக் குறித்தும்** பேசுகிறார். அவர்களிருவரையும் சபையென்று அழைக்கிறார். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ இவைகளில் உண்மையான ஆவியைக் கொண்ட சபையைக் கண்டு கொள்வர். அவர்கள் ஒருக்காலும் வஞ்சிக்கப்படுவதில்லை. ''ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துக் கொள்ளப்பட்ட வர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற் புதங்களையும் செய்வார்கள்'(மத் 24:24). ஆதிச்சபையிலே, பெந்தே கொஸ்தே காலத்திற்குச் சற்று பின்பு கள்ளச் சபையும், உண்மையுள்ள

சபையும் ஒன்றுக்கொன்று பிணைந்து, நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகள் சபையினிடையே தோன்றின. கள்ளச் சபையிலுள்ள அந்திக் கிறிஸ்துவின் ஆவி, தேவனால் நிர்மூலமாக்கப்படும்வரை, உண்மை யுள்ள சபையோடு போராடிக் கொண்டேயிருக்கும்.

எபேசு சபை ஆதியில் தேவனுடைய வார்த்தையில் கொண் டிருந்த அன்பைவிட்டு, பெந்தேகோஸ்தேயின் காலத்தில் அடைந்த நிலைமையினின்று வழுவி, பரிசுத்த ஆவியின்வழி நடத்துதலையும் ஆளுகையையும் புறக்கணித்தது. மோசே இஸ்ரவேல் ஜனங்களையும் எகிப்தினின்று வெளியே நடத்திக் கொண்டு வந்த பின்புசம்பவித்தது இதுவே. கர்த்தர் இஸ்ரவேலரை மேக ஸ்தம்பத்திலும் அக்கினிஸ்தம்பத் திலும் வழிநடத்தினது மாத்திரமின்றி, அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களைப் பரிசுத்த ஆவியினால் நிரப்பி, அவர்கள் மூலம் தீர்க்கதரிச னங்களை உரைத்தும், அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்தும், அவர்களை வழி நடத்தினர். இஸ்ரவேலரின் முழு பாளையமே, பரிசுத்த ஆவியின் அசைவினால் ஆட்கொள்ளப்பட்டிருந் தது. அப்படியிருந்தும், அவர்கள் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்து, தங்களுக்கென்று நியமங்களையும், பிரமாணங்களையும் உண்டாக்கிக் கொள்ள முனைந்தனர். பின்னர் அவர்களை ஆள ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டுமெனக்கோரி, உலகத்தின் போக்கில் சென்று சத்தியத்தை முழுவதும் புறக்கணித்துக் கடைசியில் ஒன்றுமில்லாமல் போயினர். அவ்வாறே முதல் சபையின் காலம் நன்றாகத் தொடங்கி, நாளடைவில் மோசமாகி, பரிசுத்த ஆவியைப் பூரணமாக நிராகரித்து அதன் காரண மாகக் கள்ளச்சபைகள் தோன்றின. கடைசிக் காலத்தில் கள்ளச்சபை யின் மக்களைக் கர்த்தர் நிர்மூலமாக்குவார்.

ஆதிசபையில் நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளாகத் தொடங் கியவைகள் பின்னர் போதனைகளாக மாறிச் சபையில் ஆதிக்கம் கொண்டு, தேவனைப் புறக்கணித்தன, சிறிதாக ஆரம்பிக்கப்பட்டபோது, சபைக்கு நன்மை பயக்கும் கிரியைகளாக இவைகள் கருதப்பட்டன. நாளடைவில் மலைப்பாம்பைப் போன்று அவை சபையை நெறித்து, பரிசுத்தத் தன்மையனைத்தையும் சபையினின்று அகற்றின. ஆம், கள் ளச் சபை தந்திரமுள்ளது. சபையை முழுவதும் ஆட்கொள்ளும் வரை,

அது ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரிக்கும். சபையானது கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மூலம் பரிசுத்த ஆவியினுல் நடத்தப்பட வேண்டும். இவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, ஆவியின் வரங்களைப்பெற்று, **வார்த்தையின் மூலம்** சபையை ஒழுங்கு படுத்தி, அதை நடத்தும்போது **பரிசுத்த ஆவியானவரே** அந்த சபையை நடத்துகிறுர்; ஏனெனில் வார்த்தையும் ஆவியும் **ஒன்றே.** ''தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்ருய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்'' (எபி *13:7*). எபேசு சபையின் காலத்தில், கள்ளச் சபை ஆதிக்கத்தைக் கைப்பற்றி, சபையானது மனிதனுல் ஆளப்படவேண்டும் என்று போதித்து, ஆவியின் வல்லமையைப் பெற்றதாக நினைத்து தேவனுக்கும் மக்களுக்குமிடையில் ஒரு பரிசுத்த ஆசாரியத்துவத்தை (Holypriest-hood) உண்டாக்கிக் கொண்டு, ஆரோனின் முறைக்குத் திரும்பிச் சென்றது. இயேசு கிறிஸ்துவின் மத்தியஸ்த உத்தியோகத்தை அவர்கள் புறக்கணித்து இந்த ஆசாரியர்களே மத்தியஸ்தரென்றும் மக்களை விசுவாசிக்கச் செய்ததால், அவர்கள் அந்திக் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிருந்தனர். எபேசு சபையின் உண்மையான விசுவாசிகளும் காலங்கள்தோறும் உண்டாயிருந்த உண்மையான விசுவாசிகளும் இந்த ஆசாரியத்துவத்தை வெறுத்தனர். என்றுலும் இவ்வழக்கம் எல்லாக் காலங்களிலும் கடை பிடிக்கப்பட்டு இந்தக் கடைசி காலத்தில் மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. இதன் விளைவால் அநேக ஸ்தாபனங்கள் உண்டாகி, மக்களைப் பாகுபடுத்தின. தேவனுடைய மக்கள் எப்பொழுதும் ஒன்றுயிருக்க வேண்டும். ஒரே ஆவியினுலே அவர்களெல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, **ஒவ்வொருவரும்** பரிசுத்த ஆவியினுல் நிரப்பட்டு, தேவனை வழிபடவேண்டும். ஆனுல் மனிதரோ தங்களுக்கென மதிப்பைத் தேடிக் கொண்டு, சபையை ஆளுகை செய்து, அத்தியட்சகர் (bishop) என்னும் பட்டம் பெற்று, பின்பு இதைக் காட்டிலும் உயர்ந்த பதவியை அடைந்து, பிரதம அத்தியட்சகர் (archbishop) என்னும் பட்டபெயரால் அறியப்பட்டு, தேவனுடைய வார்த்தையைத் தள்ளிப் போட்டு, தங்களுடைய சொந்த போதனைகளை சபையின் மக்களுக்குப் போதித்ததன் விளைவாக ஏற்பட்ட

தெய்வ வழிபாடு, பெந்தெகோஸ்தே காலத்திலுண்டாயிருந்ததை விட முற்றிலும் வேறுபட்டதாயிருந்தது. நிக்கோலாய் மதஸ்தரின் கிரியைகளின் விளைவாக, சபையின் ஆதிக்கம் தலைமுறை தலைமுறையாக அத்தியட்சகர்களால் ஏற்கப்பட்டு வருகின்றன. (apostolic succession) அப்போஸ்தலனாகிய பேதுரு தொடங்கி இவர்கள் வழிவழியாக வந்தவர்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். அதுவுமின்றி சபையின் அங்கத்தினர்களாவதன் மூலம் இரட்சிப்பின் கிருபை அளிக்கப்படும் என்னும் தவறான போதனையையும் இவர்கள் மக்களிடையே பரப்பினர். தேவனுடைய வார்த்தை முக்கியத்துவத்தை இழந்து, சபையின் பிரமாணங்கள் வார்த்தை வகித்த ஸ்தானத்தைக் கைப்பற்றின. அந்திக்கிறிஸ்துவின் ஆவி சபையில் வல்லமை பெற்று விளங்கினது.

பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் அவர்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வேவ்வேறு பாஷைகளில் பேசினர் என்று வேதம் கூறுகிறது (அப் 2:4). பரிசுத்த ஆவியை நாம் பெறுவோமெனில், ஆவியின் வரங்கள் நம்மிடத்தில் காணப்படும். ஆனால் இன்று, நிக்கோலாய் மதம் (ரோமன் கத்தோலிக்க மார்க்கம்) இந்தச் சத்தியத்தை உதறித்தள்ளி, சபையின் அங்கத்தினரில் ஒருவன் (wafer) புசித்து, குருவானவர் (Priest) சிறிது திராட்ச ரசம் குடித்தால் அந்த அங்கத்தினன் பரிசுத்த ஆவியைப் பெறுவானெனக் கூறுகிறது. தேவனுடைய வார்த்தையைச் சபையின் அங்கத்தினர்கள் புரிந்துகொள்ள இயலாததால், குருமார்கள் அதன் அர்த்தத்தை விளக்கிக் கொடுக்க வேண்டுமென்றும், வேதாகமம் இனியும் முடிவு பெறாததால் காலங்களை அனுசரித்து அது மாற வேண்டுமென்றும், அது எவ்வாறு மாறினதென்றும் இவர்கள் மாத்திரம் சபைக்கு அறிவிக்க முடியுமென்றும் அவர்கள் கூறுகின்றனர். எந்த ஸ்தாபனத்திலும் சத்தியத்திற்கு முரண்பட்ட தத்துவங்களைக் கண்டால் ''தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன்'' (ரோமர் 3:4) என்னும் வேதவாக்கியத்தை நினைவு கூருங்கள். வானமும் பூமியும் ஒழிந்துபோம். ஆனால் தேவனுடைய ஒரு வார்த்தையும் ஒழிந்து போவதில்லை. கிறிஸ்துவின் பிரதிநிதிகள் (Vicars of Christ) என்று தங்களைக் கூறிக்கொள்ளும் கள்ளக் கிறிஸ்துக்களினால் சபைகள் இன்று நடத்தப்பட்டு வருகின்றன.

ஞானஸ்நானத்தைக் குறித்த சத்தியத்தையும் ஸ்தாபனங்கள் மாற்றிப்போட்டன. இயேசு வாழ்ந்த காலத்திலும், பெந்தேகோஸ்தே காலத்திற்குப் பிறகும், மக்கள் தண்ணீரில் முழுக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றனர். அறிவாளிகள் இதை மறுத்து, ஆதிகாலத்தில் ஆங்காங்கே மக்களை முழுக்க இயலாத சிறிய குளங்கள் காணப்பட்டதால், தண்ணீர் தெளித்து அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்திருக்கவேண்டும் என்று வாதித்து, தெளித்தலின் முறையைக் கடைபிடித்து ஞானஸ்நானம் கொடுக்கின்றனர். அவர்கள் தெளிப்பு ஞானஸ்நானம் கொடுக்கும்போது, மூன்று கடவுள்கள் உண்டு என்றும் அவர்களின் நாமங்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற-எண்ணங்கொண்டு இவைகளின் நாமத்தினுல் ஞானஸ்நானம் கொடுக்கின்றனர். உண்மையாகவே இவைகள் தேவனின் பட்டப்பெயர்களேயன்றி நாமங்களல்ல, அத்தகைய ஸ்தாபனங்களிலுள்ள எவனுகிலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தண்ணீர் முழுக்குவதே உண்மையான ஞானஸ்நானம் என்று போதித்தால், அவன் சபைக்கு வெளியே தள்ளப்படுவான். தேவனுல் நடத்தப்படும் எந்த மனிதனும் ஸ்தாபனங்களிலிருக்க இயலாது.

பவுல் அப்போஸ்தலன் ஒரு தீர்க்கதரிசியென்றும் அவன் பரிசுத்த ஆவியால் போதிக்கப்பட்டான் என்றும் நாமறிவோம். பவுல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தான் என்ற வேத சான்றுகளுண்டு. அவன் பிரசங்கித்த சுவிசேஷத்தையன்றி வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவன் சபிக்கப்பட்டவன். அப்படியெனில், இந்த ஞானஸ்நானத்தைக் கடைபிடிக்காத எந்த ஸ்தாபனமும் பரிசுத்த ஆவியினுல் நடத்தப்படாமல், நிக்கோலாய் மதஸ்தரின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது என்று அறியலாம். ''எல்லோருடைய இரத்தப் பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன். ஆகையால், உங்களைக்குறித்தும் தேவன் தம்முடைய சுய ரத்தத்தினுலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்''. *(அப் 20:27-30).*

தந்திரமான ஆசாரியத்துவம் சபைகளைக் கைப்பற்றித் தவறான போதனைகளைக் கைக்கொண்டு, பரிசுத்த ஆவியின் வல்லமையிழந்த தெய்வ வழிபாட்டை மக்களிடையே புகுத்தும் என்பதைப் பவுல் அறிந்திருந்தான். இக்காலத்திலும், பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டோம் என்று கூறிக்கொள்ளும் மக்களிடையே, ஆவியின் வழி நடத்துதல் காணப்படவில்லை. அச்சபையின் மக்கள், மனிதர் போதிப்பதைக் கேட்டு அதை கிரகிக்கின்றனர். சபையின் மக்கள் ஆவிக்குரிய வழிபாட்டில் பங்கு கொள்ள அனுமதியின்றி அடிமைகளாகவே ஜீவிக்கினறனர். பவுலின் சுவிஷேத்தின்படி, இது உண்மையான வழிபாடு அல்ல. மக்கள் ஒன்று கூடினபோது **எல்லாரும்** பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்டு ஆவிக்குரிய வழிபாட்டில் பங்கு கொண்டனர் என்று அவன் கூறினான்.

ஒவ்வொரு முறையும் தேவன் தம்முடைய ஆவியின் எழுப்பு தலால் மக்களை அடிமைத் தனத்தினின்று விடுதலையாக்குகிறார் விடுதலை யான மக்கள் சிறிதுகாலம் கழித்து, தங்களை மறுபடியும் கட்டுப்படுத்திக் கொண்டு, அதே அடிமைத்தனத்தை மீண்டும் அடைகின்றனர். லூத்தரும் அவரைச் சார்ந்தவர்களும் கத்தோலிக்க மார்க்கத்தை விட்டு வெளிவந்து, சிறிதுகாலம் சுதந்திரமுள்ளவர்களாக வாழ்ந்து, தேவனை வழிப் பட்டனர். லூத்தரின் மரணத்திற்குப் பின்பு அவரைச் சேர்ந்தவர்கள் ஒரு ஸ்தாபனம் உண்டாக்கிக்கொண்டு, வார்த்தையைக் குறித்தத் தங்க ளுடைய சொந்த அபிப்பிராயத்தைப் பிரமாணங்களாக மாற்றி, அதற்கு மாறான எண்ணங்கொண்டவர்களைச் சபையினின்று வெளியாக்கினர். இவ்வாறு செய்ததன் மூலம் ஒரு சில மாறுதல்கள் கொண்ட கத்தோலிக்க மார்க்கத்தையே அவர்கள் பின்பற்றினதாக நாம் கருதவேண்டும். இன் றைக்குள்ள லூதரன்கள் முழுவதுமாகக் கத்தோலிக்க மார்க்கத்தின் ஆசாரங்களைப் பின்பற்றுகின்றனர்.

வெளிப்படுத்தின விஷேத்தில் (*12-ம் அதிகாரம்*) குறிக்கப்பட்ட வேசிக்கு பெண் மக்களுண்டு. இவர்களெல்லாம் தாயைப்போன்று, தேவனுடைய வார்த்தையை அகற்றிப் போட்டு, பரிசுத்த ஆவியின் கிரியைகளை மறுதலித்து, சபையின் மக்களின் மேல் அதிகாரம் செலுத்தி, சாத்தானால் உண்டாக்கப்பட்ட ஜீவனற்ற தெய்வ வழிபாட்டைச் சபை யிலுள்ளவர் பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தினர்.

நம்முடைய ஆவிக்குரிய நிலை முழுவதும் அழிந்தது, இப்பொழுது அந்தகாரம் பொருந்திய வனாந்தரத்தில் நாம் அலைந்து கொண்டிருக்கி

றோம். பெந்தேகோஸ்தே காலத்திலிருந்த வழிபாட்டை நாம் இன்று காண்பதில்லை. தேவவார்த்தை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை; மனிதனுல் ஏற்படுத்தப்பட்ட 'தலைமுறை அப்போஸ்தலத்துவம்' (Apostolic Succ ession) இன்று தழைத்தோங்குகிறது. தேவவசனம் இதை ஆமோதிக் கவில்லை. தேவனே சபையை நடத்துபவர்களை நியமிக்க வேண்டுமே யன்றி மனிதன் அவர்களை நியமிக்க உரிமை பெறவில்லை. பேதுரு ரோமாபுரியில் வாழவில்லை என்று சரித்திரம் நிரூபித்தாலும், அவர் அங்கு வாழ்ந்ததாக அவர்கள் பொய் சொல்லுகின்றனர். 'கிறிஸ்துவின் பிரதிநிதி' (Vicar of Christ)யைக் குறித்து வேதம் கூறுகிறதா? அல்லவே அல்ல. என்றுலும் மக்கள் இவ்வழக்கத்தை ஆதரிக்கின்றனர். ஏற்கெனவே அளிக்கப்பட்ட வெளிப்பாட்டுக்கு முரண்பாடான வெளிப்பாட்டைத் தேவன் அங்கீகரிக்கிறுர் என்று வேதம் எங்காவது கூறுகிறதா? என்றுலும் மனிதரால் அளிக்கப்பட்ட வெளிப்பாட்டை சபையின் மக்கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர். மரித்த பிறகு ஆத்துமாக்கள் தங்கும் ஸ்தலம் (Purgatory) ஒன்றை வேதம் குறிக்கிறதா? இந்த ஆத்துமாக்கள் பிரார்த் தனையின் மூலம் பாவம் நீங்கி இரட்சிக்கப்படக்கூடும் என்று வேதம் உரைக்கிறதா? காணிக்கை கொடுப்பதால் நரகத்தை தவிர்க்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. இவைகளனைத்தும் தவறுன அபிப்பிராயங்கள் என்று வேதவசனங்கள் எடுத்துரைக்கின்றன. ஆயினும், கத்தோலிக்க மார்க்கம் நியமப் புத்தகங்களில் இவைகளை எழுதி, பயமுறுத்தி, மக்களை பின்பற்றச் செய்கின்றது. மனிதன் பாவத்தை மன்னிக்க மனிதனுக்கு உரிமை ஏது? அவன் தேவனல்லவே. இவர்களை விவரிக்க 'பட்சிக்கிற ஓநாய்கள்' என்னும் வாக்கின் உக்கிரம் போதாது. நிக்கோலாய் மதம்தான் ஸதாபனங்களின் கொள்கைகளின் வித்து. இதன் மூலம் மனிதன் மனிதனை ஆளமுற்பட்டான்.

தேவனிடத்தில் திரும்புங்கள். தாமதமாகுமுன்பே மனந்திரும் புங்கள். நியாயத்தீர்ப்பை தேவனுடைய விரல்கள் சுவரில் எழுதுகின்றன. எருசலேம் தேவாலயத்தின் பாத்திரங்கள் பெல்ஷாத்சார் ராஜாவினுல் பரிசுத்தம் குலைக்கப்பட்டபோது, தேவனுடைய கோபக்கினை அவனைக் கொன்று போட்டது போன்று, தேவவாக்கியங்களின் பரிசுத்தம் குலைந்த வர்களை ஆவியானவர் சீக்கிரம் நியாயந்தீர்ப்பார். இன்றேமனந்திரும்பு, வேத வசனத்தை ஏற்றுக்கொள், நீ ஏன் மரிக்க வேண்டும்?

# 2

# நிக்கோலாய் மதத்தின் போதகம்
# (THE DOCTRINE OF NICOLAITANES)

வெளி.2:1:5: அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போத கத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன்.

'சபையின்மேல் அதிகாரம் செலுத்துபவர்கள்' என்ற அர்த்தத்தை 'நிக்கொலாயா' என்ற பதம் கொண்டது என்பதை நான் முன்னமே குறிப்பிட்டுள்ளேன். தேவன் எப்பொழுதும் அரசியல் சிந்தனை கொண்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களிடம் சபையின் நிர்வாகத்தை ஒப்ப டைத்ததேயில்லை. பரிசுத்த ஆவியினுல் நிறையப்பட்டு வசனத்தில் உறுதியாய் நின்றவர்களுக்கே இப்பொறுப்பை அவர் அளித்திருக்கிருர். மக்களிடையே வகுப்புவாதம் காணப்பட்டு, அவர்கள் பரிசுத்த ஆசாரி யத்துவத்தால் (Holy priesthood) நடத்தப்பட அவர் ஒருக்காலும் சித்தங் கொள்ளவில்லை. சபையை நடத்துபவர் மாத்திரமல்ல, சபை யிலுள்ள எல்லோரும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அல்லாமலும் குருமார்கள், தேவனுக்கும் மக்களுக்குமிடையே மத்தியஸ்த ஊழியம் செய்வதை வேதவசனம் ஆதரிக்கவில்லை. அதுவுமின்றி, இவர்கள் தனிப்பட்ட முறையில் தேவனை வழிபடுவத்றகு வேத ஆதாரம் எதுவுமில்லை. எல்லாரும் தேவனில் அன்புகூர்ந்து அவரைச் சேவிப்பதையே அவர் விரும்புகிருர். நிக்கொலாய் மதஸ்தரின் போதகம் இவையனைத்தையும் நிர்மூலமாக்கி, மக்களையும் குருமார்களையும் பாகுபடுத்தி, ஊழியக்காரரா யிருக்க வேண்டிய குருமார்களை அவர்கள் மேல் அதிகாரியாக்கிற்று. இந்தப் போதகம் ஒரு கிரியையாக முதலாம் சபையின் காலத்தில் தொடங் கிற்று. அச்சமயம் 'மூப்பர்கள்' (elders) 'கண்காணிப்பாளர்கள்' (Overseers) என்னும் இருவாக்குகளைக் குறித்துத் தர்க்கம் உண்டா யிற்று. ஒவ்வொரு சபையிலும் அநேக மூப்பர்கள் இருந்ததாக வேதம் கூறுகிறது. இக்னேஷியஸ் (Ignatius) போன்றவர்கள். கண்காணிப் பாளர்கள் ஊழியக்காரரைவிட மேலான பதவியைப் பெற்று, அவர்கள் மேல் அதிகாரம் செலுத்த வேண்டுமெனத் தவருகப் போதித்தனர். ஆனுல்

உண்மையாக, 'கண்காணிப்பு' என்னும் பதம் ஒரு மனிதன் வகிக்கும் உத்தியோகத்தையும், 'மூப்பன்' என்பது உத்தியோகத்தை வகிக்கும் மனிதனையும் குறிக்கின்றன. கிறிஸ்தவ அனுபவத்தில் தேர்ச்சி பெற்றவன் மூப்பனாக அக்காலத்தில் நியமிக்கப்பட்டானேயன்றி, தேர்தலின் மூலம் ஒருவன் மூப்பனாக ஆகவில்லை. அக்காலத்திய கண்காணிப்பாளர்கள் பவுல் தன் நிருபங்களில் கூறியுள்ளவைகளுக்குத் தவறான அர்த்தம் கொடுக்கத் தொடங்கினர். அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம் 20ம் அதிகாரத்தில், பவுல் மூப்பரை எபேசுவிலிருந்து மிலேத்துவுக்கு வரவழைத்த சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. அவ்வதிகாரத்தின் 17ம் வசனத்தில் இவர்கள் 'மூப்பர்கள்' என்றும் 28ம் வசனத்தில் 'கண்காணிகள்' என்றும் அழைக்கப்படுகின்றனர். அரசியல் சிந்தை கொண்ட இவர்கள் ஆதிக்கத்தைப் பெற எண்ணி, சபைகளின் மூப்பர்களின் மேல் அதிகாரம் செலுத்த இவர்கள் பவுலால் நியமிக்கப்பட்டவர்கள் என்று கூறிக்கொண்டனர். இத்தகைய எண்ணம் வேதப்பிரகாரமாகவும் சரித்திரப்பிரகாரமாகவும் தவறாகும். என்றாலும் பாலிகார்ப்பைப் போன்றவர்களும்கூட இக்கொள்கையைக் கடைபிடிக்கும் ஸ்தாபனங்களில் சார்ந்தனர். முதலாம் சபையின் காலத்தில் கிரியையாகத் தொடங்கப்பட்டது, ஒரு போதகமாக மாறி இன்று வரைக்கும் நீடிக்கிறது. கண்காணிப்பாளர்கள் (Bishops) மனிதர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும் உரிமை பாவித்து, தங்களின் விருப்பப்படி அவர்களுக்கு ஊழியத்தின் பொறுப்பைப் பகிர்ந்தளித்து, அவ்வாறு செய்வதன் மூலம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை நிராகரிக்கின்றனர். இது வார்த்தைக்கும், கிறிஸ்துவுக்கும் விரோதமான செயலாகும். பரிசுத்த ஆவியானவர் ஒருமுறை, 'பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள்'' என்று திருவுளம் பற்றினார் (அப்.13:3). இதுவே பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலாகும். ''அப்பொழுது இயேசு அவர்களைக் கிட்ட வரச் செய்து; புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கட

வன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷ குமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.'' (மத்.20:25-28) நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்களெல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்.'' (மத்.23:8-9). ஆம், கண்காணிப்பாளன் ஊழியக் காரனேயன்றி அதிகாரஞ்செலுத்துபவனல்ல.

நிக்கொலாய் மதஸ்தரின் போதகத்தைக் குறித்து இன்னும் விரிவாக உரைக்க விரும்புகிறேன். ''அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றினார்கள்'' (வெளி.13:3) என்று வெளிப்படுத்தின விசேஷம் உரைக்கிறது. காயப்பட்ட தலை உலக ஆதிக்கம் படைத்த அஞ்ஞான ரோமாபுரியைக் குறிக்கிறதென்பதை நாமறிவோம். இந்தத் தலை சொஸ்தமாகி ரோமன் கத்தோலிக்க சாம்ராஜ்யமாக எழும்பியது. அஞ்ஞான ரோம சாம்ராஜயம், இதர ராஜ்யங்களிடையே பிரிவினையுண்டாக்கி, பின்னர் அவைகளின்மேல் வெற்றி சிறந்தது. அது இரக்கமின்றி அவைகளை நாசப்படுத்தியதால், அவைகள் மறுபடியும் தலைதூக்க முடியாமல் போய்விட்டது. ரோமன் கத்தோலிக்க சபையும், மக்களை வேற்றுமைப்படுத்தி, அவர்கள்மேல் அதிகாரம் செலுத்தி, அஞ்ஞான ரோம சாம்ராஜ்யம் கடைபிடித்த கொள்கையையே கடைபிடித்து, அதன் செயல்களைத் தொடர்ந்து நடத்தி வந்தது, வேற்றுமையுண்டாக்கி அதிகாரம் செலுத்துவதே தேவன் வெறுக்கும் நிக்கொலாய் மதஸ்தரின் போதகம்.

இந்தத் தவறு சபையில் நுழைந்தபோது, கண்காணிப்பின் உத்தியோகத்தை வகிக்க மக்கள் போட்டியிடத் தொடங்கினர். இதன் காரணமாக, படித்தவர்களும் ஐசுவரியவான்களும், அரசியல்வாதிகளும் கண்காணிப்பாளராக ஏற்படுத்தப்பட்டனர். அதன் விளைவால், பரிசுத்த

ஆவியானவரின் வழி நடத்துதல் அறவே ஒழிந்து, மனித ஞானமும், மனித திட்டமும் சபையின் நிர்வாகத்தை நடத்தி வந்தன. சபையில் ஊழியம் செய்ய கிறிஸ்தவ ஒழுக்கம் அவசியமில்லையென்றும், சபையின் சடங்காச்சாரங்களும் ஒழுங்குகளும் கடைபிடித்தலே முக்கியமென்றும் கண்காணிப்பாளர்கள் வற்புறுத்தத் தொடங்கினர். இவ்விதம் மந்தையானது பொல்லாதவர்களால் பீறுண்டு போயிற்று.

இதற்கு அடுத்தபடியாக குருக்களாட்சி (hierarchy) சபைகளில் ஏற்படுத்தப்பட்டு, கண்காணிப்பாளர்கள் வித்தியாசமான பதவிகளை ஏற்றனர். கண்காணிப்பாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு, அவர்கள் தலைமை கண்காணிப்பாளர்களாக (Archbishops) அதிகாரம் செலுத்தினர். இவர்கள் மேலும் உயர்வடைந்து கார்டினல்கள் என்னும் பட்டம் பெற்றனர். மூன்றும் போனிபேஸின் (Boniface the third) காலத்தில் இவர்களெல்லாருக்கும் மேலாக போப் அதிகாரம் செலுத்தினர்.

கிறிஸ்தவ மார்க்கம் பாபிலோனிய மார்க்கத்தோடு ஒன்றுபட்டது மல்லாமல், நிக்கொலாய் மதஸ்தரின் போதகம் இம்மார்க்கத்தில் நுழைந்தது கர்த்தரின் பார்வைக்கு அருவருப்பை விளைவித்தது. ''நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும் பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுருபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் தீட்டப்பட்டிருந்தன.'' (எசே.*8:10*). ''அவன் பலத்த சத்தமிட்டு, மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று; அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்'' (வெளி.*18:2,3*).

அக்காலத்திலிருந்த அநேகர், தேவனுடைய பிள்ளைகள் எழுதிய நிருபங்களையும், கட்டுரைகளையும், படிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டதால், சபையில் நிறுவப்பட்ட நிக்கொலாய் மதஸ்தரின் போதகம் அவர்களைப் பாதிக்கவில்லை. இதனால் கோபங்கொண்ட சபைத் தலைவர்கள், உத்தமக் கிறிஸ்தவர்களைச் சபையிலிருந்து புறம்பாக்கி, நிருபங்களையெல்லாம் எரித்துப் போட்டனர். ''தேவனுடைய வார்த்தையைப் புரிந்து

கொள்வதற்குப் பிரத்யேக கல்வி அறிவு வேண்டும். பவுல் எழுதிய அநேக காரியங்கள் பேதுருவுக்குப் புரியவில்லையென்று அவனே கூறி யுள்ளான்' என்பதாக அவர்கள் கூறிவந்தனர். வார்த்தை மக்களிட மிருந்து அகற்றப்பட்ட பிறகு, அவர்கள் குருவானவர்கள் பிரசங்கித்த தைக் கேட்டு, அவர்கள் சொற்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதா யிருந்தது. குருவானவர்கள் மக்களின் சிந்தனைகளையும் ஜீவியத்தை யும் ஆட்கொண்டு கொடூரமான குருக்களாட்சிக்கு அவர்களை அடிமை களாக்கினர்.

பத்தாம் தியோடோஸியஸ் (Theodosius X) எழுதிய சாசனம் அவர்கள் மக்களை அடிமைகளாக்கியதன் சான்றாக இருக்கிறது. அவர் முதலாம் சபையில் ஞானஸ்நானம் பெற்றவுடனே இதை விடுத்தார். அது பின்வருமாறு; ''எங்களுடைய பிரஜைகள், பேதுரு ரோமர்களுக்குப் போதித்து, வழிவழியாக வந்தவர்களால் பாதுகாக்கப்பட்டு, இப்பொழுது ரோமாபுரியின் போப்பான டமஸஸ் என்பராலும் அலெக்ஸாண்டிரியா வின் கண்காணிப்பாளரான பேதுரு என்பவராலும் கைக்கொள்ளப்பட்ட மார்க்கத்தைக் கடைபிடிக்க நாங்கள் மூன்று சக்கரவர்த்திகளும் கட்டளை யிடுகிறோம். பரிசுத்த திரித்துவத்திலே சம மகிமை பெற்ற பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் ஒரே தேவத்துவத்தை நாம் விசுவாசிப்போம். **இவ் விசுவாசத்தைக் கடைப்பிடித்தவர்கள் கத்தோலிக்க கிறிஸ்த வர்கள் என்று அழைக்கப்பட்ட வேண்டும்; மூடத்தனமாக ஏனைய மார்க்கங்களைக் கைக்கொள்ளுகிறவர்களைச் சமயபேதமுள்ள வர்கள் (heretics) என்று நிந்திக்க வேண்டும். அல்லாமல் நம்மு டைய சபையின் தலைவர் திவ்விய ஞானம் கொண்டு அவர் களுக்கு அளிக்கும் தண்டனையை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

இந்தச் சக்கரவர்த்தி விடுத்த பதினைந்து சட்டங்கள் மார்க்க வழி பாட்டின் உரிமையைப் பறித்து, கத்தோலிக்க மார்க்கத்தில் சேராத வர்களை அரசாங்க அலுவலகத்திலிருந்து தள்ளி, அபராதம், நாடு கடத்தல், சொத்து பறிமுதல், மரணம் போன்ற தண்டனைகளை விதித்தன.

இவைகளனைத்தும் இக்காலத்திலும் சம்பவிக்கச் சமயம் நெருங்கி விட்டது. ரோமன் கத்தோலிக்க சபை தன்னைத் தாய்ச் சபையென

அழைத்துக் கொள்ளுகிறது. அது உண்மைதான். ரோமாபுரியின் முதல் சபையாக இருந்த அது, பின்வாங்கி பாவத்தில் பிரவேசித்தது. ஸ்தாபனமாக மாறின முதல் சபை இதுவே. நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளும் போதகங்களும் அதனிடையில் காணப்பட்டன. இச்சபை தாயாக இருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. தாயாக அது இருந்து அநேகக் குமாரத்திகளை ஈன்றது, ஒரு மகள் ஸ்திரீயிலிருந்து தோன்றுகிருள். இரத்தாம்பர ஆடையை அணிந்த ஸ்திரீ ரோமாபுரியின் ஏழு மலைகளின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிருள், அவள் வேசியாயிருந்து அநேக குமாரத்திகளைப் பெற்ருள். இவர்கள் தாம் அவர்களிருந்து வெளி வந்து திரும்பவும் ஸ்தாபனங்களையுண்டாக்கி, நிக்கோலாய் மதஸ்தரின் போதகத்தைப் பின்பற்றி, அவளையே மறுபடியும் சேர்ந்த பிராடெஸ்டண்ட் மார்க்கங்கள். வேசியென்பவள் விவாகத்தின்போது கொடுத்த வாக்குத்தத்தத்தை மீறினவள். அவள் தேவனை விவாகம் செய்து, பின்னர் பிசாசோடு வேசித்தனம் செய்து அதன் விளைவாக அவளைப் போன்ற வேசிப் பெண் மக்களை ஈன் றெடுத்தாள். தாயும் மக்களும் ஒன்று சேர்ந்து வார்த்தைக்கும் ஆவி யானவருக்கும், கிறிஸ்துவுக்கும் விரோதமான அந்திக்கிறிஸ்துவாக இருக்கின்றனர்.

ஆதியிலிருந்த கண்காணிப்பாளர்கள் வார்த்தைக்கு மேலாகத் தங்களை எண்ணினர். மக்கள் பாவங்களை அறிக்கையிடும்போது, அவை களை மன்னிக்க இவர்களுக்கு அதிகாரமுண்டென்று அவர்களிடம் கூறி னர். இது உண்மையல்ல. இரண்டாம் நூற்ருண்டில் அவர்கள் குழந்தை களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததை நாமறிவோம். இரண்டாம் நூற் றாண்டிலேயே சத்தியம் கறைபடுமாயின், சத்தியம் கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து 2000 வருஷம் அப்பாலுள்ள சபை பயங்கரமான நிலையி லிருப்பதைக் குறித்து அதிசயப்படயாதொன்றுமில்லை.

ஓ! தேவனுடைய சபையே, உனக்குள்ளது ஒரே நம்பிக்கை. வார்த்தைக்குத் திரும்பி அதைக் கைக்கொள்வாயாக.

# 3

# நிக்கோலாய் மதத்தின் வித்து நிக்கோலாய் மதத்தின் போதகம் அந்திக்கிறிஸ்துவின் ஆவி

## (THE SPIRIT OF ANTICHRIST)

என் கத்தோலிக்க நண்பர்களே, ஒரு நிமிடம் அமைதியாயிருங்கள். பிராடெஸ்டெண்டுகள், மற்றுமுள்ளவர்கள் அனைவரும் இப்பொழுது எந்நிலையில் உள்ளனர் என்பதை நாம் காணலாம். முதலாம் சபையை கவனியுங்கள், கத்தோலிக்க சபை தங்களை மூல சபை என்று அழைத்துக் கொள்வது ஒரு விதத்தில் சரியே. கத்தோலிக்க சபையும் பெந்தெகொஸ்தே நாளில்தான் ஆரம்பித்தது. சபையின் சரித்திரம் படிக்கும்வரை நான் அதை நம்பவில்லை.

அவர்கள் பெந்தெகொஸ்தே காலத்தில் ஆரம்பித்தது உண்மை தான். ஆனால் அவர்கள் அகன்றுபோகத் தொடங்கினர். பெந்தெகொஸ்தே ஸ்தாபனமும் தற்போதைய வேகத்தில் அகன்று செல்லுமானால், கத்தோலிக்க சபையைப் போன்று அதற்கு *2000* வருடகாலம் அவசியமில்லை. இன்றிருலிருந்து *100* வருடங்களுக்குள்ளாக அவர்கள் கத்தோலிக்க சபையைக் காட்டிலும் மிகுதியாக அகன்று சென்றிடுவார்கள்.

வெள்ளைக் குதிரையின் மேலேயிருப்பவன் மூன்று கட்டங்களில் காணப்படுகின்றான் (இரண்டாம் முத்திரையை தியானிப்பதற்குள் அவசியமான சூழ்நிலையை உண்டாக்குவதற்காக இவைகளைக் கூறுகிறேன்). பிசாசும், தேவனைப் போன்று, மூன்று கட்டங்களில் காணப்படுகிறான். ஆனால், அவன் அதே பிசாசுதான்.

பரிசுத்த ஆவியானவர் ஜனங்களின் மேல் ஊற்றப்பட்ட பின்னர், அவர்கள் எல்லாவற்றையும் பொதுவாக அனுபவித்தனர். தேவனுடைய ஆவியானவர் அவர்கள் மேல் தங்கியிருந்தார். அப்போஸ்தலர்கள்

வீடுகள்தோறும் சென்று அவர்களுடன் அப்பம் பிட்டனர். அனேக அடையாளங்களும் அற்புதங்களும் அப்போஸ்தலர்களால் அக்காலத்தில் செய்யப்பட்டன. அப்பொழுது சாத்தான் அவர்களிடையே ஒரு முறுமுறுப்பை உண்டாக்கினுன். அதன் பின்னர் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்த எளியவரும் அடிமைகளும் வெவ்வேறு பாகத்தில் சென்று அவர்கள் எஜமான்களுக்கு தேவனைக் குறித்து சாட்சி பகன்றனர்.

பிறகு சைனியத் தலைவர்களும், மற்றும் பல கௌரவம் வாய்ந்தவர்களும் இவர்கள் நிகழ்த்தும் அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்டு கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்தனர். பழைய இருளடைந்த அறைகளில் கிறிஸ்தவர்கள் கைகளைத் தட்டி சத்தமிட்டு, அன்னிய பாஷை பேசுவதை கௌரவம் வாய்ந்த அவர்களால் சகிக்க முடியவில்லை. அத்தகைய பரிசுத்த ஆவியின் கிரியைகளில் அவர்களுக்கு விசுவாசமும் இல்லை. ஆகையால் அம் முறைகளை மாற்றி அமைக்க அவர்கள் எண்ணினர். இயேசுவும் வெளிப்படுத்தல் 2-ம் அதிகாரத்தில் முதலாம் சபைக்குச் செய்தியை அளிக்கும்போது, நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளைக் குறிப்பிடுகிறுர். நிக்கொலாய் என்பது 'சபையின் மேல் ஜெயங் கொள்ளுதல்' எனப் பொருள்படும். அவர்கள் 'பரிசுத்த மனிதன்' என்னும் ஒருவனை சபையில் ஏற்படுத்த முயன்றனர். அவர்கள் விட்டு வந்த அஞ்ஞான மதத்தின் மாதிரியின்படி கிறிஸ்தவ மார்க்கத்தையும் அமைக்கத் தலைப்பட்டனர்.

நிக்கொலாய் என்பது வேதத்தில் அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படுகின்றது. ஏனெனில் அது கிறிஸ்துவின் மூல உபதேசங்களுக்கும் விரோதமாயிருந்தது.

சில வருடங்களுக்கு முன்னுல் ஒரு புகழ்வாய்ந்த மனிதன் நடத்தும் கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். அவருடைய பெயரை அறிவிக்க நான் விரும்பவில்லை. அவருடன் நான் கைகுலுக்கினேன்! ஆகையால் நான் கூட்டத்திலிருக்கிறேன் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர், 'இக் காலத்தில் பெந்தேகோஸ்தேகாரர் என்று அழைக்கப்படுபவர் நம்மிடையேயுள்ளனர். அவர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். ஆனுல் அது சபை கட்டப்படுவதற்கென தற்காலிகமான சாரமாய் அமைந்த ஒன்ருகும் (Scaffold work) என்ருர்.

வேதத்தை நன்கு படித்து அறிந்திருந்த அந்த வயோதிபர் இவ் வாறு கூறலாமா? அந்த சொற்கள் பரிசுத்த ஆவியினுல் உண்டான வையல்ல. ஏனெனில் சாதாரண அறிவைப் பெற்றிருக்கும் மனிதனும் கூட அவை அப்போஸ்தலருடைய கிரியைகள் அல்லவென்றும், அவை பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மூலம் நடப்பித்த கிரி யைகள் என்றறிவான்.

சபையின் காலங்களைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, எவ்வாறு நான்கு ஜீவன்களான மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவரின் சுவிசேஷ புத்தகங்கள் சூழ நின்று மத்தியிலுள்ள அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தைக் காவல் காக்கின்றன என்று பார்த்தோம். அவர்கள் எழுதின சுவிசேஷங்களின் விளைவினுல் அப்போஸ்தலரு டைய நடபடிகள் உண்டாயின. அதுதான் மரத்தில் தோன்றிய முதல் கிளையாகும். அம்மரத்தில் வேருெரு கிளை தோன்றுமாயின், அப்பொழுது நடைபெறும் கிரியைகள் அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்த கத்தைப் போன்ற வேருெரு புத்தகத்தில் எழுதப்படும். ஆகையால் ஒரே வகையான ஜீவன்தான் அவைகளில் காணமுடியும்.

ஆனுல் இன்றைக்கு மெதோடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரேஸ்பிடேரி யன், லூத்தரன், கிறிஸ்துவின் சபை, பெந்தேகோஸ்தே சபை என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஸ்தாபனங்களில் இந்த ஜீவன் காணப் படுகின்றதா? அதை ஒருக்காலும் நீங்கள் இத்தகைய ஸ்தாபனங்களில் காண முடியாது. பெந்தேகோஸ்தே ஸ்தாபனத்தில் இது சிறிதாகிலும் காணப்படுகின்றது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அவர்கள் லவோதிக்கேயா சபையின் காலத்தில் தோன்றினவர்கள். அவர்கள் சத்தியத்தைக் கடைப்பிடித்திருந்தனர். ஆனுல் இப்பொழுதோ அதைப் புறக்கணித்து விட்டனர். அவர்கள் வெதுவெதுப்பாக ஆனபடியால், தேவன் அவர்களைத் தம் வாயிலிருந்து வாந்தி பண்ணிப் போட்டார். இது வேதபூர்வமானது. வேதம் ஒரு போதும் பொய்யுரையாது. வேதம் உங்கள் சிந்தனைக்கு இணங்க வேண்டுமென்று நீங்கள் எண்ணவேண் டாம். அதற்கு மாருக உங்கள் சிந்தனை எப்பொழுதும் வேத வாக்கியங் களுடன் ஒத்திருக்கவேண்டும். அப்பொழுதுான் நீங்கள் தேவனுடன் நடைபோட முடியும். அதற்காக உங்கள் சிந்தனையை நீங்கள் எவ்வ

ளவாக மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் பரவா யில்லே. உங்கள் சிந்தனே வேதத்துடன் இணைந்திருக்கட்டும்.

பரிசுத்த ஆவி முதன் முறையாக மக்களின் மேல் விழுந்த போது என்ன நிகழ்ந்ததென்று பாருங்கள். தேவன் முதன்முறை என்ன செய் தாரோ, அவ்வாறே ஒவ்வொரு முறையும் அவர் செய்ய வேண்டும். இல்லேயெனில் அவர் முதலில் தவறு செய்தார் என்று அர்த்தமாகிறது. நாம் மானிடராகையால், தவறு செய்வதற்கு ஏதுவுண்டு. ஆனுல் தேவ னின் முதல் தீர்மானம் பரிபூரணமானது. அவர் செய்யத் தீர்மானித் திருக்கும் முறையைக் காட்டிலும் சிறந்த முறை இருக்க முடியாது. ஏனெனில் அது ஆரம்பத்திலேயே பரிபூரணமாயிருக்கும். இல்லே யெனில், அவர் முடிவற்றவர் (infinite) அல்ல.

அவர் முடிவற்றவராயிருந்தால், அவர் எல்லாமறிந்தவராயிருத்தல் வேண்டும். (Omniscient). அவர் எல்லாமறிந்தவராயிருந்தால், அவர் சர்வ வல்லமை பொருந்தினவராய் (Omnipotentt) இருத்தல் வேண்டும். ஆமென். அவர் தேவனுயிருப்பதற்கு இத்தகைய தன்மைகளேப் பெற் றிருத்தல் அவசியம். அவர் பின்னர் அதிகம் அறிந்துகொண்டார் என்று நீங்கள் சொல்லமுடியாது. ஏனெனில் அவர் அறிந்திருப்பதைக் காட்டி லும் அதிகம் அறிந்துகொள்ள முடியாது. அவரே ஞானத்தின் ஊற்றுவார். நமக்குள்ள ஞானம் சாத்தானிடமிருந்து தோன் றினது. ஏதேன் தோட்டத்தில் ஏவாள் விசுவாசத்துக்குப் பதிலாக ஞானத்தை தெரிந்து கொண்டாள். அந்த ஞானத்தை நாம் அவளிட மிருந்து சுவீகரித்துள்ளோம்.

வெள்ளேக் குதிரையின் மேலிருக்கிறவன் அந்திக்கிறிஸ்து என்று முதலில் அழைக்கப்படுகிறுன். இரண்டாம் கட்டத்தில் அவன் கள்ளக் கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறுன். ஏனெனில் அதுவரை மக்களி டையே காணப்பட்ட ஆவி அப்பொழுது ஒரு மனிதனுக்குள் வாசம் செய்கிறது. வெள்ளேக் குதிரையின் மேலேறியிருந்தவன் புறப்பட்டுச் சென்றபோது அவனுக்குக் கிரீடமில்லே என்பது நினேவிருக்கிறதா? பின்பு, அவனுக்குக் கிரீடம் சூட்டப்படுகிறது. அவன் தொடக்கத்தில் நிக்கொலாய் (Nicolaitane Spirit) ஆவியாயிருந்து, பின்னர் ஒரு மனித

னுக்குள் வாசம் செய்து, சிம்மாசனத்தில் வீற்றிருந்து, கிரீடம் சூடப்படு கிறான்.

அச்சிம்மாசனத்தில் அவன் வெகுகாலம் வீற்றிருந்தான் என்பதை முத்திரைகள் உடைக்கப்படும்போது நாம் பார்க்கலாம். வெகுகாலம் கழிந்த பின்னர், சாத்தான் பரலோகத்திலிருந்து தாழத் தள்ளப்பட்டபோது, அவன்; அதே மனிதனுக்குள் புகுந்து கொள்கிறான். அப்பொழுது அவன் மிருகமென அழைக்கப்படுகிறான். அவன் மிகுந்த வல்லமை கொண்டவனாய், அற்புதங்கள் அனேகம் செய்து, யுத்தத்தில் அனேகரைக் கொன்று போடுவான். ஆம், ரோமாபுரி தன்னாலியன்றவரை இவை அனைத்தையும் செய்யும்.

அவன் கொடூரமான ரோம தண்டனையை அனேகருக்கு விதித்து அவர்களைக் கொன்று போடுவான். இப்பொழுது சில வேத வாக்கியங் களைப் படிக்க முடிந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுதல் என்னும் ரோம தண்டனை விதிக்கப்பட்டு மரித்தார். அடுத்த பெரிய வெள்ளிக்கிழமை பகலன்று நான் பிரசங்கிக்கத் தீர்மானித்திருக்கும் செய்தி, **'அங்கே அவர்கள் அவரைச் சிலுவை யில் அறைந்தார்கள்'** என்னும் தலைப்பைக் கொண்டதாயிருக்கும். 'அங்கே' -உலகத்திலேயே பரிசுத்தமான, மதசம்பந்தமான காரியங் களில் ஈடுபட்டிருந்த ஸ்தலம் எருசலேம். 'அவர்கள்' உலகிலேயே மிக வும் பரிசுத்தமுள்ளவரென்று கருதப்பட்ட யூதர்கள், 'அவரை' இதுவரை வாழ்ந்தவர் எல்லாரிலும் மிகவும் மகத்தானவர். 'சிலுவையிலறைந் தார்கள்' --ரோமாபுரி கொண்டிருந்த மிகக் கொடூரமான தண்டனை.

வியாபாரிகளின் சங்கத்தில் நான் இச் செய்தியை அளிக்கும் போது, தங்கள் நிலையை அவர்கள் அறிந்துக்கொள்ளக் கர்த்தர் உதவி செய்வாராக! அவர்களைத் தாக்க வேண்டுமென்பதற்காக அல்ல. அவர்கள் பிரசுரிக்கும் 'வியாபாரிகளின் பத்திரிக்கை' (Business Men's Journal)யில் பரிசுத்த பிதாக்களைக் குறித்தும் முக்கியஸ்தர்களைக் குறித் தும் அவர்கள் எழுதுபவை அனைத்தும் அர்த்தமற்றவை என்பதை அறி வுறுத்தவே. கிறிஸ்தவர்கள் எந்த மனிதனையும் 'பிதா' என்று அழைக் கக்கூடாது. என்றால் முடிந்தவரை அவர்களுக்கு நான் ஆவிக்குரிய வழி களில் உதவி செய்ய முயன்றிருக்கிறேன். (இந்த பிரசங்கம் பதிவு செய் யப்பட்டுள்ள ஒலிநாடக்கள் அங்கு செல்கின்றன என்பதை கவனிக்

கவும்) ஆகையால் இனிமேல் அவர்களுக்கு நான் புத்திமதி கூறப் போவதில்லே.

முதலாவதாக நிக்கோலாய் மதஸ்தரின் கிரியைகள் தொடங்கின. அக்காலத்தில் மக்கள் கூச்சலிட்டு. கைகளேத் தட்டிப்பாடி பரிசுத்த ஆவியினல் நிறையப்பட்டு, பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்தது போன்று குடிகாரரைப் போல் நடந்து கொண்டனர் இதை கௌரவம் வாய்ந்தவர்கள் சகிக்க முடியாமல் அவர்களிடமிருந்து பிரிந்துபோக விழைந்தனர். அவர்களேக் குடிகாரரென்றும் அவர்கள் அழைத்தனர். அவர்களால் தங்களேத் தாழ்த்திக் கொண்டு அங்ஙனம் கௌரவக் குறைவாக நடந்து கொள்ள முடியவில்லே.

தேவன் தம்மை இழிவான நிலேக்குத் தாழ்த்துவதனுல் அவர் மகத்தானவராகக் கருதப்படுகிருர். அவரைக் காட்டிலும் மகத்தானவர் யாருமில்லே. ஆனுல் எந்த மனிதனும் தன்னேத் தாழ்த்திக் கொள்ள முடியாத அவ்வளவு இழிவான நிலேக்கு அவர் தம்மை தாழ்த்திக் கொண்டார், அவர் பரலோகத்தின் ராஜாவாயிருந்தார், ஆனுல் பூமியிலே மிகவும் எளிமையான பட்டினமாகிய எரிகோவுக்கு அவர் வந்தார். அங்கு மிகவும் குள்ளனுன சகேயுவும் கூட கீழே குனிந்து தம்மைக் காணத் தக்கவாறு அவர் தம்மை அந்த நிலேக்குத் தாழ்த்திக்கொண்டார். அவர் மந்திரவாதியென்றும் பெயல்செபூல் என்றும் மிகவும் இழிவான பெயர்களால் அழைக்கப்பட்டார். உலகம் அவரை அவ்வாறு தான் எண்ணியிருந்தது.

அவர் கொடூரமான மரணம் எய்தினுர். எல்லா ஸ்தாபனங்களாலும் அவர் புறக்கணிக்கப்பட்டார். அவருக்குத் தலே சாய்ப்பதற்கு இடமில்லாமல் இருந்தது. ஆனுல் தேவன் அவரை எல்லாவற்றிற்கு மேலாக உயர்த்தினதால் இப்பொழுது அவர் பரலோகத்தைக் காண குனிந்து பார்க்க வேண்டியிருக்கிறது. தேவன் அவருக்கு மகத்தான நாமத்தையளித்து, அவர் இப்போது வானேர், பூதலத்தோர் இவர்களின் நாமக்காரணராயிருக்கிருர், வானேரின் குடும்பங்களும் பூதலத்தோரின் குடும்பங்களும் 'இயேசு'வென்று பெயரிடப்பட்டுள்ளன. முழங்கால்கள் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும் படிக்கும் நாவுகள் யாவும் இங்குள்ளவரும், பாதாளத்திலுள்ளவரும் - அவரைக் கர்த்தர் என்று அறிக்கைப் பண்ணும்படிக்கும் அவர் எல்லா நாமத்திற்கும் மேலான

நாமத்தைப் பெற்றிருக்கிறார். பாதாளம் அவருக்கு முன்பாக முழங்காற் படியிட வேண்டும். எல்லாமே அவருக்கு முன்பாக பணியவேண்டும். முதலில் அவர் எளிமையுள்ளவராயிருந்து பின்னர் மகத்தான ஸ்தானத் திற்கு தேவனால் உயர்த்தப்படுகிறார், தன்னைத் தாழ்த்துகிறவனெவனும் உயர்த்தப்படுவான்.

இந்த நிக்கோலாய் ஆவி ஞானத்தைப் பெற்று சாமார்த்தியமுள்ள தாய் இருக்க விரும்பியது. ஏவாள் ஞானத்தைப் பெற்று தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் ஆலோசனை செய்தது போன்று, இந்த ஆவியும் செய்தது. சபையும் அதைப் பின்பற்றத் தொடங்கினது. நம் சபையை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இந்த பட்டினத்தின் நகராண்மைக் கழகத் தலைவரும் (Mayor) போலீஸ் அதிகாரிகளும் இதன் அங்கத்தி னராகச் சேர்ந்தால், முலாவதாக நம் செயற்குழுவையும் மற்ற அங்கத்தி னரையும் சந்தித்து, 'இவையெல்லாம் வித்தியாசமாயிருக்கவேண்டும். என்று சொல்லுவதற்கு அவர்களுக்கு எண்ணம் தோன்றும். சபையின் போதகர் உண்மையாக பரிசுத்த ஆவியால் நிறையப்படாமலிருந்தால், போதகர் அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்க நேரிடும்.

அவ்வாறே முதலாம் சபையின் காலத்திலும் தொடங்கினது. 'அவர்கள் கூறுவது நியாயமாய்த் தோன்றுகிறது' என்று ஜனங்கள் கூற முற்பட்டு அவர்களுக்கு செவிகொடுப்பார்கள். ஒரு மனிதன் இங்கு வந்து, ' இந்த ஆலயம் சிறியதாயிருக்கிறது, நாம் ஐந்து லட்சம் டாலர்கள் மதிப்புள்ள ஒரு சிறிய ஆலயத்தை கட்டுவோம். அதற்கு பணம் சேமிப் பதற்கென நாம் வானொலி மூலம் அறிக்கை விடுக்கலாம்' என்று கூறினார் என்று வைத்துக்கொள்வோம். அங்ஙனமாயின், தொண்ணூறு சதவிகிதம் அவர் தன்னயமான சிரத்தை கொண்டுள்ளார் என்று அர்த்தம்.

அவர் ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டினால், எல்லா காரியங்க ளையும் அவர் தம் விருப்பத்திற்கேற்ப செய்வார். ஆலயத்தைக் கட்டு வதற்கு அவர் நிதி வசூலித்த காரணத்தால், அவருக்கு விரோதமாக நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. பின்னர் தேவனை குறித்து ஒன்றுமே அறியாத ஒரு மனிதன் வேத பள்ளியிலிருந்து கொண்டு வரப்பட்டு போதனாக நியமிக்கப்படுவான். இப்போதகன் அம்மனிதனின் விருப்பத் திற்கிணங்குவான். ஏனெனில் அவர் போதகனுக்கு ஒரு புதிய மோட்டார் வண்டி வாங்கிக் கொடுத்திருப்பார். அல்லாமல், போதகன் விரும்பிய யாவையும் அவர் வாங்கிக் கொடுப்பார்.

ஞானம், சாமார்த்தியம் இவ்விரண்டையும் கூர்ந்து நோக்குங்கள். ஆதிசபையின் காலத்தில் சபைக்குள் நுழைந்தவர்கள், 'பெண்மணிகள் மயிரை எப்படி வைத்திருந்தால் என்ன? அதில் என்ன வித்தியாசமுள்ளது? என்று கேட்டனர். ஆனால் வேதம் அதில் வித்தியாசம் உள்ளதாகத்தான் கூறுகிறது. தேவன் அதில் வித்தியாசம் உண்டு என்றால், அதில் நிச்சயமாக வித்தியாசமுண்டு. ஆனால் அவ்விதமான வித்தியாசம் சபையில் நுழைக்கப்பட்டால், போதகன் அதை ஆட்சேபித்து வெளியேற வேண்டும்! அல்லது அதை ஆமோதித்து அங்கு நிலைத்திருக்வேண்டும். சபையின் மக்கள் தாம் அதற்கு சம்மதம் தெரிவித்து அதை சபையில் நுழைத்தனர்.

இந்த நிக்கோலாய் ஆவி கௌரவம் வாய்ந்தவர்கள் அங்கத்தினராயிருந்த சபையில் அசைவாடத் தொடங்கினது. அதிக பணமும் அவர்களால் சபைக்கு கிடைத்தது. ஆகையால் மக்கள் இவர்கள் சொற் கேட்டுபணிந்தனர். பிசாசின் ஒழுங்கற்றதன்மை. ஏவாளும் இதை தான் ஏதேன் தோட்டத்தில் செய்தாள்.

ஏவாள் ஆதாமின் மனைவியாவதற்கு முன்பு பிசாசின் உபாயதந்திற்குப் பணிந்தாள். அவள் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் ஞானத்தை உபயோகித்தாள். ஆதாம் ஏவாளுடன் கணவனும் மனைவியுமாக வாழ்வதற்கு முன்னமே சாத்தான் அவனைத் தோற்கடித்தான், 'மணவாட்டி மரம் (The Bride Tree) என்னும் என் செய்தியைக் கேட்டதுண்டா? அது இதை போதிக்கிறது.

இப்பொழுது கவனியுங்கள். ஏவாள் ஞானத்திற்குப் பணிந்தாள், அவள் சாத்தனிடம், 'கர்த்தர் இவ்விதம் உரைத்திருக்கிறார்' என்று சொல்ல, அவன், 'அவர் அவ்விதம் சொல்லியிருக்கவே மாட்டார். நீ ஞானத்தைப் பெற விரும்புகிறாய். சிலவற்றை அறிந்துகொள்ள நீ விரும்புகிறாய். ஊமையைப் போல் ஏன் இருக்கிறாய்? நீ சிலவற்றை அறிந்துக்கொள்ள வேண்டும்' என்றான்.

மானிட வர்கத்தின் முதலாம் மணவாட்டி, தேவனுடைய வார்த்தையை அரணகக் கொண்டிருந்தாலும், கணவனுடன் சேருவதற்கு முன்பு சாத்தானின் பொய்க்குச் செவிகொடுத்து கிருபையினின்று விழுந்துபோனாள். தேவனுடைய வார்த்தையின் பின்னால் மறைந்திருந்

தால், அவள் ஒருக்காலும் விழுந்திருக்கவே மாட்டாள், இது மாம்சப் பிர கராமான மணவாட்டிக்கு நேரிட்டது. அவளுக்குக் கொடுக்கப்பட்ட சாபமென்ன? தேவனுடைய வார்த்தையினின்று வெளிவந்தால் அவளுக்கு அளிக்கப்பட்ட சாபம்...

அவள் தேவனுடைய வார்த்தையை 98 சதவிகிதம் விசுவாசித்தாள். இதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அவள் முதலில் கர்த்தர் கூறிய அனைத்தையுமே விசுவாசித்தாள். அவர் கூறின யாவையும் அவள் சாத்தானுக்குத் தெரிவித்தாள். சாத்தானும் அது சரியென்று ஆமோதித்தான். குறி வைத்து சுடும்போது துப்பாக்கி சற்று அகன்று போனால் எவ்வாறு குறி தவறி விடுமோ, அதுபோன்று சாத்தானும் உங்களை மடக்கி வார்த்தையிலிருந்து சற்று அகலும்படி செய்கிறான். ஏவாள் தேவன் கூறின வார்த்தையைப் பெரும்பாலும் விசுவாசித்தாள் என்றாலும் அவள் தவறி விட்டாள்.

சிறிது விவேகத்தை ஏற்றுக் கொண்டு எவாள் தேவனுடைய வார்த்தையைப் புறக்கணித்ததன் விளைவு... 'நீவீர் ஏன் பெண்களைக் குறித்து எப்பொழுதுமே குறை கூறிக் கொண்டிருக்கிறீர்' என்று நீங்கள் கேட்கலாம்.... 'பரிசுத்த ஆவியைப் பெறுவதன் அடையாளம் அன்னிய பாஷை பேசுவது என்று சொன்னாலும் அல்லவென்று சொன்னாலும் அதில் என்ன வித்தியாசமுள்ளது?' என்றும் நீங்கள் கேட்கலாம். உண்மையாக அதில் வித்தியாசமுண்டு, அவையெல்லாம் இக்காலத்தில் சரிபடுத்தப்பட வேண்டும். ஏழு சபையின் காலங்கள்தோறும் இவையனைத்தும் ஊகிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் தேவனே உண்மையை விளக்கிக் காணபித்து அதை உறுதிப்படுத்தி நிரூபிக்கும் தருணம் இப்பொழுது வந்துவிட்டது. அவ்வாறு செய்யாவிடில் அவர் தேவனல்ல. தேவன் தம் வார்த்தையை ஆதரிக்க வேண்டும்.

இப்பொழுது கவனியுங்கள். மாமிசப் பிரகாரமான ஸ்திரீ ஞானத்தையும் விவேகத்தையும் விரும்பி தேவனுடைய வார்த்தையை விட்டகன்று மானிட வர்க்கத்துக்கு மரணத்தை இழைத்தாள். ஆவிக்குரிய ஸ்திரீயும் - கிறிஸ்துவின் மணவாட்டி பெந்தேகோஸ்தே நாளில் தோன்றி நிசாயாவின் மாநாட்டில் தேவனுடைய வார்த்தையை இழந்து போனாள். லீ! (Lee) அது சரியென்று உமக்குத் தெரியுமா? நிசாயா மாநாட்டில்

அவள் ஆவிக்குரிய பிறப்புரிமையை விற்றுப் போட்டு கான்ஸ்டன் டைன் அரசின் பிரம்மாண்டமான அலுவலகங்களையும், ரோமாபுரி ஏற் படுத்தின கொள்கைகளையும் ஏற்றுக் கொண்டாள். நான் கூறுவது கத் தோலிக்கர்களை புண்படுத்தும். ஆனால் பிராடெஸ்டெண்டுகளும், அதையே செய்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் வேசியின் குமாரத்திகளென வேதத்தில் அழைக்கப்படுகின்றனர். அவர்களைச் சேராத ஒரு சிறு கூட்டம் மணவாட்டியின் ஸ்தானத்தை வகிக்கிறது. ஆம், அவள் கணவன் அவளைச் சேரு முன்பு- அவளுக்குக் கலியாணம் ஆகு முன்பு - அவள் தன் கற்பை இழந்து போனாள்.

லவோதிக்கேயா சபையின் காலத்தில் அவள், 'நான் அரசியைப் போல் இருக்கிறேன். நான் திரவிய சம்பன்னன். எனக்கு ஒரு குறைவுமில்லை' என்று சொல்வது உங்களுக்கு நினைவிருக்கலாம். 'நான்தான் பரிசுத்த சபை. முழு உலகமே என்னை நோக்கிப் பார்த்து என் பேரில் சார்ந்திருக்கிறது' என்று அவள் கூறுகின்றாள். ஆனால் தேவனோ அவளை நோக்கி, 'நீ நிர்பாக்கியமுள்ளவனும்,பரிதபிக்கப்படத் தக்கவனும், தரித்திரனும், குருடனும் நிர்வாணியுமாயிருப்பதை அறியா மல் இருக்கிறாய்' என்கிறார். அதுதான் அவளது நிலைமை. இக்கடைசி நாட்களில் அவளுடைய நிலைமை அவ்வாறாக இருக்கும் என்று பரிசுத்த ஆவியானவர் கூறியிருப்பதால், அது நிச்சயமாக அவ்வாறே இருக்க வேண்டும்.

ஏவாள் பாவத்தில் விழுந்தபோது, சர்வ சிருஷ்டியுமே அவளுடன் பாவத்தில் விழுந்தது. சபையும், தேவனுடைய வார்த்தையும் அவருடைய ஆவியையும் ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, ரோம சபையின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதனால், அன்று முதல் நிறு வப்பட்ட எல்லா ஸ்தாபனங்களும் சபிக்கப்பட்டு அதனுடன் பாவத் தில் விழவேண்டுவதை, தவிர வேறு வழியில்லை.

ஒரு கூட்டம் மக்கள் ஒரு விஷயத்தைக் குறித்து ஆலோசிக்கும் போது, ஒருவன் ஒரு விதமாகவும் வேறொருவன் வேறு விதமாகவும் சிந் திப்பான். இவையெல்லாவற்றையும் ஒன்றுபடுத்தும் போது, அதன் விளைவு குழப்பம்தான்.

அதுதான் நிசாயா மாநாட்டில் நடைபெற்றது. அதுவேதான் மெதோடிஸ்டுகள், பிரஸ்பிடேரியன்கள், கிறிஸ்து சபை ஸ்தாபனத்தார். இன்னும் ஏனைய ஸ்தாபனத்தார் அனைவரும் செய்தனர். ஸ்தாபனத் தைச் சேர்ந்த எந்த ஒரு மனிதனும், தேவனுடைய வெளிப்பாட்டை அவன் பெற்றிருப்பினும், அவனுடைய ஸ்தாபனத்தின் கொள்கைகள் கூறுவதையே பிரசங்கிக்க வேண்டும். இல்லையேல் அவன் விரட்டி யடிக்கப்படுவான். நான் கூறுவது தவறு என்று நீங்கள் என்னிடம் சொல்ல முடியாது. நானும் ஸ்தாபனத்தில் இருந்திருக்கிறேன். ஆகை யால் அங்கு நடப்பவை எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அவை யாவுமே சபிக்கப்பட்டுள்ளது.

**'என் ஜனங்களே, அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமல் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்'** என்று தூதன் உரைத்ததில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் அவள் சபிக்கப்பட்டிருக்கிறாள். அவளுடைய பிறப்புரிமை யையும் கற்பையும் அவள் விற்றுப் போட்டதால் தேவ கோபாக்கினை அவள் மேல் தங்கியுள்ளது. ஆகையால் அவள் துன்பப்பட வேண்டும். ஆயினும் இத்தகைய நிலைமையிலும் கூட, கடைசி காலத்தில் அவளுக்கு எல்லாவற்றையும் திரும்ப அளிப்பதாக கர்த்தர் யோவேல் *2:25ல்* (வேண்டுமானால் அவ்வசனத்தைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்) வாக்களித்துள்ளார். ''பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது. வெட்டுக்கிளி விட்டதை பச்சைக்கிளி தின்றது. பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது'' இவ்விதம் ஒவ்வொரு பூச்சியும் சபையைத் தின்று போட்டு முடிவில் அடிமரம் மாத்திரம் மீந்திருக்கிறது.

கவனியுங்கள். ரோமர்கள் விட்டதை லூத்தரன் ஸ்தாபனத்தார் தின்றனர். லூத்தரன்கள் விட்டதை மெதோடிஸ்ட் ஸ்தாபனத்தார் தின்றனர். மெதோடிஸ்டுகள் விட்டதை பெந்தேகோஸ்தே ஸ்தாபனத்தார் தின்று, முடிவில் அடிமரம் மாத்திரமே எஞ்சியுள்ளது. முசுக்கட்டைப் பூச்சி,வெட்டுக்கிளி இவை யாவும் ஒரே பூச்சி தன் வளர்ச்சியில் வித்தி யாசமான நிலையை அடைதலாகும் என்று நாம் புத்தகங்களின் வாயிலாக அறியலாம்.

அந்த குறிப்பை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, முத்திரைகளுக்கு வாருங்கள். ஒரே பூச்சிதான் வித்தியாசமான நிலைகளில் காணப்படுகின்றது என்பதை நாம் முத்திரைகளை ஒன்றன் பின் ஒன்றாக சிந்திக்கும் போது அறிந்து கொள்ளலாம். ஒரே பூச்சி தன் வளர்ச்சியில் நான்கு வித்தியாசமான நிலைகளை அடைகின்றன. முத்திரைகளிலும் ஒரே ஆவி நான்கு வித்தியாசமான கட்டங்களில் காணப்படுகின்றது. ஒன்று தின்னாமல் விட்டதை, மற்றொன்று தின்று,முடிவில் அடிமரம் மாத்திரம் உள்ளது? ஆனால் யோவேல், ''நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும் பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன் (என்று கர்த்தரை உரைக்கிறார்)'' என்கிறான். (யோவேல் 2:25).

கர்த்தர் அதை எவ்விதம் செய்யப் போகிறார்? அது கிறிஸ்துவின் போதனைகளுக்கு விரோதமான அந்திக்கிறிஸ்துவாகத் தோன்றி தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக ஸ்தாபனத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டது. காலங்கள் கடந்து போகும்தோறும், சீர்திருத்தக்காரரும் அதில் ஈடுபட்டனர். ஆனால் ''ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களில் (வெளி.10:1-7) அவன் எக்காளம் ஊதப் போகிறபோது தேவ ரகசியம் நிறைவேறும்'' என்று வேதம் உரைக்கிறது.

சூளையைப் போல் எரியும் பெரிதும் பயங்கரமான நாள் வருவதற்கு முன்னே கர்த்தர் எலியா தீர்க்கதரிசியை அனுப்புவாரென்றும், அவன் பிள்ளைகளுடைய இருதயத்தை, பிதாக்கள் கொண்டிருந்த மூல அப்போஸ்தல - பெந்தேகோஸ்தே - விசுவாசத்திற்கு திருப்புவானென்றும் மல்கியா 4-ம் அதிகாரம் வெளிப்படையாகக் கூறுகிறது.

அந்த வாக்குத்தத்தம் நமக்களிக்கப்பட்டுள்ளது. ஆகையால் நாம் வாழ்வது கடைசி நாட்களாயிருக்குமானால், ஏதோ ஒன்று இப்பொழுது சம்பவித்தாக வேண்டும். அது இப்பொழுது நிகழ்ந்து கொண்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

சாத்தானின் திரித்துவத்தைக் கவனியுங்கள். ஒரே ஆள் ஒன்றன் பின் ஒன்ருக மனிதனுக்குள் வாசம் செய்கிருன். சபையைத் தின்ற பூச்சிகளும் அவ்வாறே ஒன்றன் பின் ஒன்ருக மாறுகிறது. நிக்கொலாய் -அந்திக்கிறிஸ்துவின் ஆவி, போப்பாண்டவர் - கள்ளத் தீர்க்கதரிசி; மிருகம் - பிசாசே மனிதனுக்குள் வாசம் செய்தல், இதை நீங்கள் மன தில் கொண்டால், குதிரையின் மேல் சவாரி செய்பவர்களும் ஒன்றபின் ஒன்ருக அந்நிலையையடைவதைக் காணலாம். நான் உங்கள் முன் னிலையில் இதை ஒரு படமாக சித்தரிக்க முயல்கிறேன். கரும்பலகையில் வரைந்தால், இதை நீங்கள் இன்னும் நன்ருகப் புரிந்து கொள்ளலாம்.

முதலாவதாக அவன் அந்திக்கிறிஸ்துவின் ஆவியாய் இருக்கிருன். யோவானும், 'பிள்ளைகளே, அந்திகிறிஸ்துவின் ஆவி இப்பொழுதே கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்து கொண்டு வரு கிறது' என்ருன். அப்பொழுதே வித்து முளைக்கத் தொடங்கினது. அடுத்த சபையின் காலத்தில் அவன் முடிசூடப்படுகிருன். இது மிகவும் வெளிப் படையாய் அமைந்திருக்கவில்லையா?

அந்திக்கிறிஸ்துவின் ஆவி தேவனுடைய வசனத்துக்கு விரோத மாய் கிரியை நடப்பித்து, மக்களை வசனத்திலிருந்து விலகும்படி செய் தது. அதுதான் நடந்த முதல் சம்பவம். ஏவாள் காயீனை கண்டிக்கா தனுல் இது ஏற்படவில்லை. முதலாவதாக, ஜனங்கள் தேவனுடைய வார்த்தையினின்று திருப்பப்பட்டனர். அதுதான் எல்லாவற்றிற்கும் ஆரம்பம். தேவனுடைய வார்த்தையை விட்டகன்று ரோமாபுரியின் தத்துவங்களை ஏற்றுக் கொண்டதன் விளைவாக ஜீவனுள்ள தேவனுடைய சபை - கிறிஸ்துவின் மணவாட்டி - ஆவிக்குரிய விபச்சாரம் செய்தாள். எல்லா ஸ்தாபனங்களும் அவ்விதமே செய்தன.

கடைசி நாட்களில் திரும்ப அளிக்கும் வழியை உண்டாக்கு வேன் என்று வாக்களித்திருக்கிருர். கர்த்தர் தொடக்கத்தில் செய்தது போல் அவருடைய வார்த்தை இந்த உலகத்தில் வந்து அது தொடங்கி னதை மீண்டும் செய்யும். அவன் (ஏழாம் தூதன்) தேவனுடைய ஆவி யில் அபிஷேகம் பெற்று வரும் போது 'பிள்ளைகளுடைய விசுவாசத்தை

பிதாக்களுடைய விசுவாசத்திற்கு நேராக திருப்புவான். இவ்விதமாகத் தான் அவர் திரும்ப அளிக்கிறார்.

தேவனுடைய வார்த்தையை நாம் பழைய நிலைக்குக் கொண்டு வரும்போது, அது முன்பு செய்த கிரியைகளையே இப்பொழுதும் செய்யும். ''என்னை விசுவாசிக்கிறவன நர்ன செய்த கிரியைகளைத் தானும் செய்வான்.'' என்று இயேசு கூறியுள்ளார். சில கிரியைகளை நடப்பிக்க அவர்கள் அவரிடம் கேட்டுக் கொண்டபோது அவர், 'பிதாவானவர் காண்பிக்கிறதை மாத்திரம் நான் செய்கிறேன். அதை நான் முதலில் காணாமல் எதையும் செய்வதில்லை. பிதாவானவர் செய்யக் காண்கிற தெதுவோ அதையேயன்றி வேறொன்றையும் நான் செய்ய மாட்டேன். பிதாவானவர் எவைகளைச் செய்கிறாரோ அவைகளை நானும் அந்தப்படி செய்வேன்' என்று சொல்லியிருக்கிறார். ஒரு பத்திரிகையைப் படிப்பது போன்று அவ்வளவு தெளிவாய் இது காணப்படுகிறதல்லவா?

அவன் ஆரம்பத்தில் அந்திகிறிஸ்துவின் ஆவியாயிருந்தான். அந்திக் கிறிஸ்துவின் ஆவி போதிப்பதையே போதிக்கும் ஒரு மனிதனை அந்த ஆவி ஆட்கொண்டு, அவன் கள்ளத் தீர்க்கதரிசியாகிறான். அப்படியானால் ஸ்தாபனத்தில் அங்கத்தினனாயிருப்பவனைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நீங்களே யோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.

* * * * *

S.டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை–600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**

*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*

*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260